J. யோகரத்னம் - சாந்த மரியாள் த. ம.வி.

Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

## மீடிறன் பரம்பல்

- வகுப்பாயிடை உள்ள மீடிறன் பரம்பல் கூட்டமாக்கப்பட்ட மீடிறன் பரம்பல் எனப்படும்.
- கூடுதலான மீடிறனைக் கொண்ட வகுப்பாயிடை ஆகார வகுப்பு எனப்படும்.
- ஒரு வகுப்பாயிடையில் (மேல் எல்லை – கீழ் எல்லை) + 1 இன் பருமன் வகுப்பாயிடை பருமன் ஆகும்.

உ – ம் :

| வகுப்பாயிடை | மீடிறன் (எண்ணிக்கை) |
|---|---|
| 1 - 10 | 3 |
| 11 - 20 | 5 |
| 21 – 30 | 15 |
| 31 – 40 | 3 |
| 41 - 50 | 4 |

- இங்கு ஆகார வகுப்பு 15 ஈட்டுக்களைக் கொண்ட வகுப்பு 21 – 30 ஆகும்.

வகுப்பாயிடை பருமன் என்பது, 1 – 10 இனை எடுத்துக் கொள்வோமாயின்

1 – கீழ் எல்லை, 10 – மேல் எல்லை

∴ (மேல். எ. – கீழ்.எ.) +1

(10 – 1) + 1

9 + 1 = 10

**பயிற்சி I**

| வகுப்பாயிடை | மீடிறன் (எண்ணிக்கை) |
|---|---|
| 8 - 16 | 3 |
| 17 - 25 | 7 |
| 26 – 34 | 12 |
| 35 – 43 | 10 |

I ஆகார வகுப்பு யாது?

II வகுப்பாயிடை பருமன் யாது?

**வகுப்பாயிடையின் நடுப்பெறுமானம்**

- வகுப்பாயிடையில் $\frac{(\text{கீழ் எல்லை} + \text{மேல் எல்லை})}{2}$ மூலம் நடுப்பெறுமானம் பெறப்படும்.

உ – ம் : 20 – 30 இன் நடுப்பெறுமானம்

$$\frac{20+30}{2} = \frac{50}{2} = 25$$

**பயிற்சி II**

பின்வரும் கூட்டமாக்கிய மீடிறன் பரம்பல்களின் நடுப்பெறுமானத்தைக் காண்க.

| புள்ளிகள் | நடுப்பெறுமானம் | மீடிறன் |
|---|---|---|
| 0 – 10 | 5 | 2 |
| 20 – 30 | …. | 3 |
| 30 – 40 | …. | 5 |
| 40 - 50 | …. | 7 |
| 50 – 60 | …. | 6 |
| 60 – 70 | …. | 10 |
| 70 - 80 | …. | 15 |

| அரிசி எடை | நடுப்பெறுமானம் | மீடிறன் |
|---|---|---|
| 120 - 125 | 122.5 | 6 |
| 125 – 130 | …. | 3 |
| 130 – 135 | …. | 7 |
| 135 – 140 | …. | 15 |
| 140 – 145 | …. | 6 |
| 145 – 150 | …. | 3 |
| 150 - 155 | …. | 8 |

- **கணிதப் பாடநூலின் 26.1 பயிற்சியை செய்யவும்.**

**நடுப்பெறுமானத்தைக் கொண்டு இடை கணித்தல்**

- நான்கு நிரல்களைக் கொண்ட அட்டவணை பயன்படுத்தப்படும்.
- நிரல் 1 – வகுப்பாயிடை பிரதியிடப்பட வேண்டும்
- நிரல் 2 – நடுப்பெறுமானம் காணப்பட்டு பிரதியிடப்பட வேண்டும் $(x)$
- நிரல் 3 – மீடிறன் பிரதியிடப்பட வேண்டும் (f)
- நிரல் 4 – நடுப்பெறுமானம் X மீடிறன் ($x$ X f )

| வகுப்பாயிடை | நடுப்பெறுமானம்$(x)$ | மீடிறன்$(f)$ | $(f \times x)$ |
|---|---|---|---|
| 00 - 10 | 5 | 3 | 15 |
| 10 - 20 | 15 | 5 | 75 |
| 20 - 30 | 25 | 7 | 175 |
| 30 - 40 | 35 | 4 | 140 |
| 40 - 50 | 45 | 1 | 45 |
| | | $\Sigma f = 20$ | $\Sigma fx = 450$ |

இடை$= \frac{\Sigma fx}{\Sigma f}$

$\frac{450}{20} = 22.5$

**பயிற்சி III**

➢ பின்வரும் அட்டவணையின் இடைவெளிகளை நிரப்பி இடையைக் கணிக்க.

| புள்ளி ஆயிடை | நடுப்பெறுமானம்$(x)$ | மீடிறன்$(f)$ | $(f \times x)$ |
|---|---|---|---|
| 4 - 8 | 6 | 3 | 18 |
| 8 - 12 | …. | 7 | …. |
| 12 - 16 | …. | 15 | …. |
| 16 - 20 | …. | 11 | …. |
| 20 - 24 | …. | 4 | …. |
| | | $\Sigma f = 40$ | $\Sigma fx = \cdots$ |

இடை$= \frac{\Sigma fx}{\Sigma f}$ = ……………… = ……………. புள்ளிகள்

➢ ஒரு கடையில் 40 நாட்களில் விற்பனை செய்யப்பட்ட அரிசியின் நிறை

| அரிசியின் நிறை kg | நடுப்பெறுமானம்$(x)$ | மீடிறன்$(f)$ | $(f \times x)$ |
|---|---|---|---|
| 0 - 25 | 12.5 | 8 | 100.00 |
| 25 - 50 | …. | 4 | …. |
| 50 - 75 | …. | 12 | …. |
| 75 - 100 | …. | 10 | …. |
| 100 - 125 | …. | 6 | …. |
| | | $\Sigma f = 40$ | $\Sigma fx = \cdots$ |

இடை$= \frac{\Sigma fx}{\Sigma f}$ = ……………… = ……………. kg

- **கணிதப் பாடநூலின் 26.2 பயிற்சியை செய்யவும்.**